இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

1658 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

பதவிகள் - வெற்றிடம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகளும் பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும் மேற்படி வர்த்தமானியில் பார்க்கவும்

பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு, இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - நுவரெலியா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்களை உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2010, ஆடி மாதம் 09 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2010, வைகாசி 11.

அட்டவணை

மாவட்டம்	பிரதேச செயலாளர் பிரிவு	விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும்	விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி
நுவரெலியா	ஹங்குரன்கெத்த	உடகம்பாக பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் உடகிவகிற்ற பிரிவில் விவாகம் (பொது/கண்டிய) பதிவாளர் பதவி	மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், நுவரெலியா

6-106

பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

களுத்துறை பெரிய வைத்தியசாலை

அளுத்கம, தர்காநகர் மற்றும் பேருவளை வைத்தியசாலைகளுக்கான சமைத்த உணவு வழங்கல் - 2010

2010 ஆம் ஆண்டுக்கான சமைத்த உணவு வழங்குபவர்களை தெரிவுசெய்வதற்கான விலைமனு கோரப்படும்.

2. 2010.06.07 ஆந் திகதி முதல் 2010.06.22 ஆந் திகதிவரை மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 2.00 மணிவரை வேலை நாட்களில் ரூ. 500 உடன் (திரும்ப கொடுக்கப்பட மாட்டாது) கீழே தரப்பட்டுள்ள தரவுகளின்படி சொத்துக்கள் உறுதிப்படுத்துவதுடன் லாஞ்சு பதிவுசெய்த பிறகு விலைபட்டியல் அலுவலகத்தில் பெறமுடியும்.

3. 2010.06.23 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு விலைமனு கோரல் திறக்கப்படும்.

வைத்தியசாலையின் பெயர்	மீளப்பெறக்கூடிய வைப்புத் தொகை	சொத்துக்கள் பெறுமதி உறுதிப் படுத்தும் தொகை
பேருவளை வைத்தியசாலை	ரூ. 5,000.00	ரூ. 50,000.00
தர்காநகர் வைத்தியசாலை	ரூ. 5,000.00	ரூ. 45,000.00
அளுத்கம	ரூ. 5,000.00	ரூ. 35,000.00

விலைமனு கோரலுக்கான நிபந்தனைகள் அடங்கிய பிரதி வேலை நாட்களில் வந்து கதைப்பதுடன், கணக்காளரின் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (034-2226619).

2010.03.30 ஆந் திகதி "தினமின" பத்திரிகையில் முதல் விளம்பரத்தில், திறக்கப்படும் விலைமனு கோரல் செய்யப்படமாட்டாது என்பதை அறிவிக்கிறோம்.

(டாக்டர்) அஜித் தந்தநாராயண,
பணிப்பாளர்.

பெரிய வைத்தியசாலை,
களுத்துறை.

6-170

உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

சொபியா லங்கா அபரல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இல. பீவீ 8444

இத்தால் சகலரும் அறிவது யாதெனில்,

2010, மே 17 ஆந் திகதி நடைபெற்ற மேற்படி கம்பனியின் அதிவிசேட பொதுக்கூட்டத்தில் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட பிரிவு 320(1) இன் கீழ் மேற்படி கம்பனியை அங்கத்தவர்களின் 'தன்னிச்சையான ஒடுக்குதல்' மூலம் 2010, மே 17 ஆந் திகதி முதல் கலைப்பதற்கான விசேட தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

மகேஸ் தயாலால் அமலின்,
அஜெய்குமார் தயாலால் அமலின்,
செராட் தயாலால் அமலின்,
பணிப்பாளர்கள்.

2010, மே 17.

6-181/1

சொபியா லங்கா அபரல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இல. பீவீ 8444

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட பிரிவு 346(1) இன்கீழான கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல்

கொழும்பு 4, காசல் வீதி, இல. 2, 4 ஆம் மாடியில் அமைந்துள்ள எஸ்ஜேஎம்எஸ் அசோசியேட்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த பீ. ஈ. ஏ. ஜெயவிக்கிரம மற்றும் ஜீ. ஜே. டேவிட் ஆகிய நாம், கொழும்பு 02, பிறேபுறூக் பிளேஸ், இல. 75, ஹேமாஸ் ஹவுஸ், 7 ஆம் மாடியில் அமைந்துள்ள சொபியா லங்கா அபரல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் கம்பனியில் 2010, மே 17 ஆந் திகதி நடைபெற்ற அதனது அதிவிசேட பொதுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி, மேற்படி கம்பனியின் கலைப்பாளர்களாக நியமிக்கப் பட்டுள்ளோம் என்பதை சகலருக்கும் அறியத்தருகிறோம்.

பீ. ஈ. ஏ. ஜெயவிக்கிரம,
ஜீ. ஜே. டேவிட்,
கலைப்பாளர்கள்.
(சொபியா லங்கா அபரல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்).

மே/பா. எஸ்ஜேஎம்எஸ் அசோசியேட்ஸ்,
ரிஸ்ரக்ஷர் அன்ட் கோர்ப்பரேட் ரிகவரி,
லெவல் 4, இல. 2, காசல் லேன்,
கொழும்பு 4.
2010.05.17.

6-181/2

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழான டிறென்டி எக்ஸ்போட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் எனும் கம்பனியின் கம்பனி கலைப்பு உத்தரவு பற்றிய அறிவித்தல்

(கம்பனியின் பதிவு இல. என்(பீவீஎஸ்) 46482)

கம்பனியின் பெயர் : டிறென்டி எக்ஸ்போட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 146, நாத்தாண்டிய றோட், தங்கொட்டுவ
நீதிமன்றம் : வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
வழக்கு இலக்கம் : எச்சீ (சிவில்) 53/2009/சீஓ
நீதிமன்ற கட்டளைத் திகதி : 2010.02.01
கோரிக்கை தாக்கல் செய்த திகதி : 2009.11.03

பீ. ஈ. ஏ. ஜெயவிக்கிரம,
ஜீ. ஜே. டேவிட்,
கலைப்பாளர்கள்.

மே/பா. எஸ்ஜேஎம்எஸ் அசோசியேட்ஸ்,
ரிஸ்ரக்ஷர் அன்ட் கோர்ப்பரேட் ரிகவரி,
லெவல் 4, இல. 2, காசல் லேன்,
கொழும்பு 4.

6-180/1

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் சரத்து 346(1) இன் கீழான டிறென்டி எக்ஸ்போட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் எனும் கம்பனியின் இணை கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல்

கம்பனியின் பதிவு இல. என்(பீவீஎஸ்) 46482

கம்பனியின் பெயர் : டிறென்டி எக்ஸ்போட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 146, நாத்தாண்டிய றோட், தங்கொட்டுவ

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, யூன் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, யூன் மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

லக்ஷ்மன் குணவர்தன,
அரசாங்க அமுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்பட்டது.

நீதிமன்றம் : வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
வழக்கு இலக்கம் : எச்சீ (சிவில்) 53/2009/சீஓ
பீ. ஈ. ஏ. ஜெயவிக்கிரம,
ஜீ. ஜே. டேவிட்,
கலைப்பாளர்கள்.
(சொபியா லங்கா அபரல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்).
மே./பா. எஸ்ஜேஎம்எஸ் அசோசியேட்ஸ்,
ரிஸ்ரக்ஷர் அன்ட் கோர்ப்பரேட் ரிகவரி,
லெவல் 4, இல. 2, காசல் லேன்,
கொழும்பு 4.
2010.02.01.
6-180/2

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) பிரிவின் பிரகாரம் பொது அறிவித்தல்

கம்பனியின் பெயர் : சாய் டிரெடிங் (பிவிடி) எல்டிதி
கம்பனி இலக்கம் : பீவீ 72283
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2010.05.12
கம்பனி பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 429டி., ரணபிம மாவத்தை, முள்ளேரியா வடக்கு, அங்கொடை
அமல்கமேற்றற் மனேஜ்மன்ற் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட், செயலாளர்கள்.

இல. 96-2/2, புரொன்ட் வீதி,
கொழும்பு 11.
2010.05.15.
6-188

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) பிரிவின் பிரகாரம் பொது அறிவித்தல்

கம்பனியின் பெயர் : நிம்செல் இக்யூடி மனேஜ்மன்ற் (பிவிடி) எல்டிதி
கம்பனி இலக்கம் : பீவீ 72362
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2010.05.19
கம்பனி பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 255/1, கடுவளை வீதி, பத்தரமுல்லை
அமல்கமேற்றற் மனேஜ்மன்ற் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட், செயலாளர்கள்.

இல. 96-2/2, புரொன்ட் வீதி,
கொழும்பு 11.
2010.05.21.
6-187

அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைத்தல்

வீ. சீ. ஐ. பிளான்ரேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் 2010, மே 13 ஆந் திகதியன்று கூட்டிணைக்கப்பட்டதென 2009 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-
கம்பனியின் பெயர் : வீ. சீ. ஐ. பிளான்ரேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2010.05.13
கம்பனி இலக்கம் : பீவீ 72299
பதிவுசெய்யப்பட்டுள்ள அலுவலகம் : இல. 20, அல்பேர்ட் கிறசேன்ட், கொழும்பு 7
சபையின் கட்டளைப்படி,
நிதி சேவைகள் மற்றும் கொமர்ஷியல் ஏஜென்ஸீஸ் (பிறைவேட்) லிமிட்டெட், செயலாளர்கள்.

6-186

கூட்டிணைக்கப்பட்டதும் மட்டுப்படுத்தப்பட்டதுமான 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் பிரிவு 9(1) விதிகளுக்கமைய பகிரங்க அறிவித்தல்

கம்பனியின் பெயர் : ரொபோ இன்ஜினியர்ஸ் (தனியார்) நிறுவனம்
கம்பனியின் இலக்கம் : பீவீ 72304
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2010, மே 13
பதிவுசெய்யப்பட்ட அலுவலக விலாசம் : இல. 25சி, சந்திரலேகா மாவத்தை, கொழும்பு 08
(சட்டத்தரணி) எம். லேகா எம். குறே, செயலாளர்.

6-194

அற்றோணி உறுதிப்பத்திரம் இரத்துச்செய்தல்

ஆடிகம, மதவன்குளம், கடயன்தமுவ என். எல். ஸ்டோர்ஸ் இல் வசிக்கும் நெயினா லெவ்வே மொகம்மது நஸார் (அ. அ. இல. 691643620 V) ஆகிய நான், புத்தளம் கல்லடிய சீமெந்து தொழிற்சாலை முன்னால் வசிக்கும் விஜேசிறிகெதற அமரதாஸ (அ. அ. இல. 430840266 V) என்பவரிடம் ஒப்படைத்திருந்த அற்றோணி உரிமையை 2010.04.24 ஆந் திகதி எழுதி உறுதிப்படுத்திய இல. 4914 ஆகிய அற்றோணி உறுதிப்பத்திரத்தை பிரசித்த நொத்தாரிசு எவ். நதீவ் நவாப் முன்னிலையில் இன்றிலிருந்து இரத்துச்செய்வதுடன், நிராகரிக்கப்பட்டது என்பதையும் மேற்படி அற்றோணி உறுதிப்பத்திர உரிமையையும், விஜேசிறிகெதர அமரதாஸ என்வருடன் இருந்த கொடுக்கல் வாங்கல் தொடர்புகளோ எதுவும் இல்லை என்பதையும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் இத்தால் அறியத் தருகிறேன்.

நெயினா லெவ்வே மொகம்மது நஸார்.
2010.05.11.
6-196

அற்றோணி உறுதிப்பத்திரம் இரத்துச்செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் வழங்கும் அறிவித்தல் என்னவென்றால், அவஸ்திரேலியாவின் விக்டோரியா 3145, கவுல்பீல்ட் கிழக்கு, டென்டொனோ வீதி, இல. 13/860, அவஸ்திரேலியாவின் விக்டோரியா மாநிலத்தின் சட்டவாதியாக தொழில்புரியும் பெட்ரிக் ஸ்மித்தினால் உறுதி செய்யப்பட்டு அதனை 2005 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 5 ஆந் திகதி 312/55/14767 என்ற தொகுதிப் பிரிவின் கீழ் பதிவுசெய்யப்பட்டு, அவஸ்திரேலியா விக்டோரியா 3178, ரோவில், மெரியன் கோட், இல. 1 ஜச் சேர்ந்த லிலேந்திரா ஷாமிலா சமரநாயக்க ஆகிய நான், இலங்கையில் களனிய, பசிஹேன றோட், 7 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த ட்ரெவின் அசோகா சமரநாயக்கவுக்கு வழங்கிய அற்றோணி தத்துவப்பத்திரம் இத்தால் இரத்துச்செய்து செயலிழக்கப்படுகின்றது.

ட்ரெவின் அசோகா சமரநாயக்க எனது சார்பாக செய்யப்படும் எதுவித கொடுக்கல் வாங்கல்களுக்கும் எனது எதுவித பொறுப்பும் இல்லையென அறிவிக்கிறேன்.

லிலேந்திரா ஷாமிலி சமரநாயக்க.
6-229

பொது அறிவித்தல்

பொது கம்பனியாக மாறுதலில் பெயர் மாற்றம்

கொழும்பு 8, மருதானை வீதி, 1089 ஆம் இலக்க இடத்தில் பதியப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ள 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீள பதிவுசெய்யப்பட்ட (கம்பனி இல. பீவீ 6401) எம்எச்ஏ ஸ்டோரேஜ் பெட்டரி (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனம் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவின்கீழ் 2010, மே 12 ஆந் திகதி தொடக்கம் நடைமுறையில் இருக்குமாறு ஒரு பொதுக் கம்பனியாக மாற்றப்பட்டுள்ளதென 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க (சட்டவாக்கம்) கம்பனிகள் சட்டத்தின் 11(5) பிரிவின் விதிகளுக்கு அமைவாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது. கம்பனி தனது பெயரை கீழ்க்கண்டவாறு மாற்றியுள்ளது :

மெக் ஸ்டோரேஜ் பெட்டரி லிமிட்டெட் சட்டவாக்கத்தின் 11(1) ஆம் பிரிவுக்கு அமைவாக.
இல. 141/3, வெக்ஷோல் வீதி,
கொழும்பு 02.
2010, மே 13.
சபையின் கட்டளைப் பிரகாரம்.
சார்ட் பிஸ்னஸ் சிஸ்டம்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட், செயலாளர்கள்.

6-239

அற்றோணிப்பத்திரம் இரத்துச் செய்தல்

இத்தால் சகலரும் அறிவது யாதெனில்,

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், நிககொல்ல, யடவத்த, இல. 114 இல் வசிக்கும் நஜிமுதீன் ரிஸ்வான் மொஹமட் (தே. அ. அ. இல. 700010074 V) ஆகிய நான், மாத்தளை மாவட்டம், நிககொல்ல, இல. 136 இல் வசிக்கும் அப்துல் குதூஸ் மொஹமட் இல்லியாஸ் என்பவருக்கு வழங்கப்பட்ட இல. 192 மற்றும் 2003.03.26 ஆந் திகதி கொழும்பு பிரசித்த நொத்தாரிசு டீ. கே. தனபால முன்னிலையில் எழுதப்பட்ட அற்றோணி தத்துவப்பத்திரத்தை இன்று முதல் இரத்துச்செய்து இல்லாதொழித்து விடுவதாக இலங்கைச் சனநாயக சோசலிசக்கு குடியரசு மக்களுக்கு அறிவிக்கின்றேன். இவ் அற்றோணிப்பத்திரம் கொழும்பு பதிவாளர் அலுவலகத்தில் இல. 255, 182, 5404 ஆம் பக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இன்று முதல் மேற்கூறிய 192 ஆம் இலக்க அற்றோணி தத்துவப் பத்திரத்தை பாவித்து மேற்கூறிய அப்துல் குதூஸ் மொஹமட் இல்லியாஸ் செய்யும் எவ்வித நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்பு கூறமாட்டேன்.

நஜிமுதீன் ரிஸ்வான் மொஹமட்.
2010.05.22.
6-157

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) பிரிவின் விதிகளுக்கமைய அறிவித்தல்

கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2009.11.09
கம்பனியின் பெயர் : லங்கா டுனா கென்னிங் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 69871
பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 5/6, பொலிஸ் பார்க் டெரஸ், கொழும்பு 5
கோர்ப்பரேட் மெனேஜ்மன்ட் கன்சல்டன்ட்ஸ், அன்ட் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட், செயலாளர்கள்.

6-158

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) பிரிவின் விதிகளுக்கமைய விடுக்கப்படும் அறிவித்தல்

கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2010.02.26
கம்பனியின் பெயர் : எச்எஸ் பவர் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 70860
பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி : ஹெய்யன்துடுவ
கோர்ப்பரேட் மெனேஜ்மன்ட் கன்சல்டன்ட்ஸ், அன்ட் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட், செயலாளர்கள்.

6-159

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) பிரிவின் விதிகளுக்கமைய அறிவித்தல்

கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2009.11.13
கம்பனியின் பெயர் : ஸ்பிரிட் வைண்ட் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 69870
பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 5/6, பொலிஸ் பார்க் டெரஸ், கொழும்பு 05
கோர்ப்பரேட் மெனேஜ்மன்ட் கன்சல்டன்ட்ஸ், அன்ட் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட், செயலாளர்கள்.

6-160

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் பிரிவு 9(1) விதிகளுக்கமைய அறிவித்தல்

கம்பனியின் பெயர் : மட்டுப்படுத்தப்பட்ட (தனியார்) மெகாபேட் ட்ரேடிங் கம்பனி
பதிவு இலக்கம் : பீவீ 68812
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2009, ஒகத்து 14
பதிவுசெய்யப்பட்ட அலுவலக விலாசம் : 197பி, கொழும்பு வீதி, வந்துரகல, குருநாகலை
கூட்டிணைக்கப்பட்ட முகாமைத்துவ ஆலோசனை மற்றும் சேவைகள் (தனியார்) நிறுவனம், செயலாளர்கள்.

6-161

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) பிரிவின் விதிகளுக்கமைய விடுக்கப்படும் அறிவித்தல்

கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2010.02.09
கம்பனியின் பெயர் : ட்ரெண்டிவெயார் அதிகாரிகம (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 70952
பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 451/1, கண்டி வீதி, ரண்முத்துகல, கடவத்தை

கோர்ப்பரேட் மெனேஜ்மன்ட் கன்சல்டன்ட்ஸ், அன்ட் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட், செயலாளர்கள்.

6-162

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழான அறிவித்தல்

(1) கம்பனியின் பெயர் : சிமா சைத்த கிரின் வொன்னிலா (பிறைவேட்) லிமிட்டெட்
(2) கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2010.04.08
(3) கம்பனி இலக்கம் : பீவீ 71778
(4) பதிவு முகவரி : இல. 30/84, போர உத்யான, போரா மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை
சிமா சைத்த கிரின் வொன்னில் (பிறைவேட்) லிமிட்டெட், கம்பனிச் செயலாளர்கள்.

2010.05.06.
6-168

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(1) ஆம் விதிகளின்கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

கம்பனியின் பெயர் : கே. பி. ஜஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 71948
முகவரி : இல. 67, ஸினமன் கார்டின் ரெஸிடன்சீஸ், இல. 9/6, வார்ட் பிளேஸ், கொழும்பு 7
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2010, ஏப்பிறல் 20
பணிப்பாளர்.

6-169

ஏல விற்பனைகள்

சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்னர் சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)
1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

சொத்துக்கள், நிலமனைகள் ஏலவிற்பனை

கணக்கு இல. 0050 5000 6311-டீ. எம். ஏ. அலஸ் மற்றும் டபிள்யு. கே. ஏ. பீ. டயஸ்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2009.11.26 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2010.03.19 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானிலும் 2010.03.16 ஆந் திகதிய "திவயின", "ஜலண்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான எழுபத்தைந்து இலட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து அறுநூற்றுப்பன்னிரண்டு ரூபா அறுபத்தெட்டு சதம் (ரூ. 75,42,612.68) 2009, செத்தெம்பர் 19 ஆந் திகதி முதல் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித்தீர்க்கும் திகதிவரை ஐம்பத்தெட்டு இலட்சத்து இருபத்துமூவாயிரத்து தொளாயிரத்தெழுபத்தைந்து ரூபா இருபத்தொரு சதம் (ரூ. 58,23,975.21) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு வீதமும் (16%) மேலும் பதினொரு இலட்சத்து நாற்பதாயிரத்து இருநூற்றெழுபத்தாறு ரூபா நாற்பத்தைந்து சதம் (ரூ. 11,40,276.45) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு இருபத்திரண்டு வீதமும் (22%) வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு பிணையாக வைக்கப் பட்டுள்ள இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரரான பீ. கே. ஈ. சேனாபத்தி மூலமாக 2010.07.01 ஆந் திகதி மு. ப. 11.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் தீர்மானிக்கின்றது.

அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், வடக்கு களுத்துறை தொட்டமுனே களுத்துறை பெத்தையில் களுத்துரை நகர சபை எல்லைகளுக்குள் கட்டுகுருந்தையில் அமைந்த லேக் வீதி, வரிமதிப்பீட்டிலக்கம் 16/A ஐ ஏற்ற "சியம்பலாகாஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜயசிரி கொடிக்காரகே என்பவரால் தயாரிக்கப்பட்ட 1999, ஒற்றோபர் 05 ஆந் திகதியிடப்பட்ட இல. 2688A எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் A1B எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு: லொட் A1A ; கிழக்கிற்கு : வீதி; தெற்கிற்கு : அதே காணியின் லொட் A2 ; மற்றும் ; மேற்கிற்கு : சியம்பலாகாஹாவத்தையின் நிர்ணயிக்கப்பட்ட பகுதி, இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் இருபது பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 20பே.) அளவினைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் மற்றும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைகளுடன் கூறப்பட்ட இல. 2688A எனும் வரைபடத்திற்கு அமைவாக காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் G 217/255 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கூறப்பட்ட லொட் A1B கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்:-

மேற்கூறப்பட்ட கட்டுகுருந்தையில் அமைந்த லேக் வீதி, வரிமதிப்பீட்டிலக்கம் 16/A ஐ ஏற்ற "சியம்பலாகாஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. டீ. எல். விஜேநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2003, நவெம்பர் 09 ஆந் திகதியிடப்பட்ட இல. 1935 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் A1B எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு: கூறப்பட்ட இல. 1935 எனும் வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட லொட் A1A ; கிழக்கிற்கு : கே. வெல்லரியான வசித்த சியம்பலகாஹாவத்தையின் ஒரு பகுதி (தற்போது வீதி) ; தெற்கிற்கு : கூறப்பட்ட இல. 2688 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் A2 ; மற்றும் ; மேற்கிற்கு : சியம்பலாகாஹாவத்தையின் நிர்ணயிக்கப்பட்ட பகுதி, இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் இருபது பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 20பே.) அளவினைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் மற்றும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைகளுடன் கூறப்பட்ட இல. 1935 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,
கம்பனிச் செயலாளர்.
6-235/1

சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்னர் சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)
1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

சொத்துக்கள், நிலமனைகள் ஏலவிற்பனை

கணக்கு இல. 0050 5000 6311-டீ. எம். ஏ. அலஸ் மற்றும் டபிள்யு. கே. ஏ. பீ. டயஸ்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2009.11.26 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2010.03.19 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானிலும் 2010.03.16 ஆந் திகதிய "திவயின", "ஜலண்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான முப்பத்துமூன்று இலட்சத்து ஐநூற்றெழுபதொரு ரூபா எழுபத்தாறு சதம் (ரூ. 33,10,571.76) 2009, செத்தெம்பர் 19 ஆந் திகதி முதல் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித்தீர்க்கும் திகதிவரை முப்பது இலட்சத்து பத்தாயிரத்து நூற்றுப்பத்து ரூபா எண்பத்திரண்டு சதம் (ரூ. 30,10,110.82) இத்துடன் மேலதிக

வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினேழு தசம் ஐந்து வீதமும் (17.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரரான பீ. கே. ஈ. சேனாபத்தி மூலமாக 2010.07.01 ஆந் திகதி மு. ப. 10.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் தீர்மானிக்கின்றது.

அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், தெற்கு களுத்துறை தொட்டமுனே பேருவளை பெத்தையில் பேருவலை நகர சபை எல்லைகளுக்குள் வோட் இல. 05, பேருவலை நல்லஹேனையில் அமைந்த, நல்லஹேன வீதி, வரிமதிப்பீட்டிலக்கம் 03 ஐ ஏற்ற "தொட்டபொதுயாவத்த' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. டீ. எல். விஜேநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2003, யூன் 04 ஆந் திகதியிடப்பட்ட (2007, ஓகத்து 29 ஆந் திகதி அசல் பிரதி என அத்தாட்சிப்படுத்தப்பட்ட) இல. 1830 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு: அதே காணியின் ஒரு பகுதி; கிழக்கிற்கு : பரட்டபிட்டியவத்த மற்றும் கதன்வத்த ; தெற்கிற்கு : பரனவத்த மற்றும் ; மேற்கிற்கு : நல்லஹேன வீதி. இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் பதின் எட்டு தசம் ஏழு இரண்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 18.72பே.) அளவினைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் மற்றும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 1830 எனும் வரைபடத்திற்கு அமைவாக களுத்துறை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் H 261/254 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,
கம்பனிச் செயலாளர்.

6-235/2

சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்னர் சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)
1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

சொத்துக்கள், நிலமனைகள் ஏலவிற்பனை

கணக்கு இல. 0007 5005 3564-டீ. எஸ். சீ. விக்கிரம ஆரச்சி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2009.11.26 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2010.02.12 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானிலும் 2010.02.02 ஆந் திகதிய "திவயின", "ஜலண்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான குறிப்பிடப்பட்ட நாற்பத்துமூன்று இலட்சத்து மூவாயிரத்து முப்பத் தொன்பது ரூபா எண்பது சதம் (ரூ. 43,03,039.80) 2009, ஓகத்து 19 ஆந் திகதி முதல் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித்தீர்க்கும் திகதிவரை முப்பத்தேழு இலட்சத்து எழுபத்தையா யிரத்து முந்நூற்றுப்பதினேழு ரூபா ஏழு சதம் (ரூ. 37,75,317.07) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினேழு தசம் ஐந்து வீதம் (17.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள் , ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்ட இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரரான ஜ. டபிள்யு. ஜயசூரிய மூலமாக 2010.06.28 ஆந் திகதி பி. ப. 4.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் தீர்மானிக்கின்றது.

அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், ஹாரிஸ்பத்தவின் குளுகம்மன சியாபத்து கொண்டதெனிய மற்றும் ஹல்லொலுவ கிராமத்தில் அமைந்த "நுகேகொட வளவ்வெவத்த மற்றும் நுகேகொட எக்கஸ்ஸெஹென" என்று அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. டபிள்யு. வீரபனே என்பவரால் தயாரிக்கப்பட்ட 1989, மே 30 ஆந் திகதியிடப்பட்ட உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. ஜே. பண்டார என்பவரால் தயாரிக்கப்பட்ட 2005, ஒற்றோபர் 12 ஆந் திகதி அனுமதிக்கப்பட்ட (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜே. யட்டவர என்பவரால் தயாரிக்கப்பட்ட 1965, ஓகத்து 24 ஆந் திகதியிடப்பட்ட இல. 410 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 4 இன் ஒரு பகுதி) இல. 369 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடகிழக்கிற்கு : இல. 410 எனும் வரைபடத்தில் லொட் 3 ஐ பிரிக்கும் இயற்கை வேலி ; தென்கிழக்கிற்கு : இல. 410 எனும் வரைபடத்தில் லொட் 4 ; தென்மேற்கிற்கு : இல. 410 எனும் வரைபடத்தில் லொட் 3 ; மற்றும் வடமேற்கிற்கு : வீசீ வீதி. இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் பதினைந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 15பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 369 எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் H 746/215 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,
கம்பனிச் செயலாளர்.

6-233

சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்னர் சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)
1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

சொத்துக்கள், நிலமனைகள் ஏலவிற்பனை

கணக்கு இல. 1042 5341 5109-பி. ரீ. ரூப்பசிங்ஹ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2009.08.27 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2010.03.12 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானிலும் 2010.02.25 ஆந் திகதிய "திவயின", "ஜலண்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான குறிப்பிடப்பட்ட அறுபத்தொன்பது இலட்சத்து எழுபதா யிரத்து நூற்றுமூன்று ரூபா எழுபத்துநான்கு சதம் (ரூ. 69,70,103.74) 2009, மே 26 ஆந் திகதி முதல் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித்தீர்க்கும் திகதிவரை ஐம்பத்தொன்பது இலட்சத்து நாற்பத்தோரா யிரத்து இருநூற்றுநாற்பத்தொரு ரூபா நாற்பத்தெட்டு சதம் (ரூ. 59,41,241.48) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு இருபத்தொரு வீதம் (21%) வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்ட இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரரான பீ. கே. ஈ. சேனாபத்தி மூலமாக 2010.06.29 ஆந் திகதி மு. ப. 10.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் தீர்மானிக்கின்றது.

அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளையின் பல்லே பத்துவின் கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள், கொள்ளுப்பிட்டி அல்ஃபிரட் பிளேஸ் மற்றும் தார்ஸ்ட்டன் வீதியில் அமைந்த அல்ஃபிரட் பிளேஸ் இல் வரிமதிப்பீட்டு இல. 39 1/1 ஐ ஏற்ற தொடர் மாடி வளாகத்தில் தொடர் மாடிக் கட்டிடத்தின் மேற்குப் பகுதி, முதலாம் மாடியில் அமைந்த 1260 சதுர அடிகளிலான தரைப்பிரதேசத்தைக் கொண்ட அல்ஃபிரட் பிளேஸ் இன் ஊடாக சமீபத்திலான, பிரவேசிப்பதற்கான பொது வழியைக் கொண்ட உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். எஸ். ரீ. பீ. சேனாதீர என்பவரால் தயாரிக்கப்பட்ட 1974, சனவரி 23 ஆந் திகதியிடப்பட்ட இல. 732 எனும் தொடர் மாடி வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து தெளிவாகக் குறிப்பிடப்பட்ட இரண்டு படுக்கையறை குடியிருப்பு வளாகம் எனக் காட்டப்பட்ட தொகுதி 5 எனக் குறிப்பிடப்பட்ட, கூறப்பட்ட தொகுதி 5 இன் எல்லைகளாவன - வடக்கிற்கு : இத்தொகுதியின் வடக்குச் சுவற்றின் மையம் மற்றும் இத்தொகுதியின் மேற்கு பல்கனியின் வடக்குச் சுவற்றின் மையம் ; கிழக்கிற்கு : இத்தொகுதியின் கிழக்குச் சுவற்றின் மையம் மற்றும் Y எனக் குறிப்பிடப்பட்ட படிக்கட்டின் மற்றும் கீழே இறங்கும் இடத்தின் மேற்குச் சுவற்றின் மையம் ; தெற்கிற்கு : இத்தொகுதியின் தெற்குச் சுவற்றின் மையம் மற்றும் Y எனக் குறிப்பிடப்பட்ட படிக்கட்டின் மற்றும் இறங்கும் இடத்தின் வடக்குச் சுவற்றின் மையம் மற்றும் இத்தொகுதியின் மேற்கு பல்கனியின் தெற்குச் சுவற்றின் மையப் பகுதி ; மேற்கிற்கு : இத்தொகுதியின் மேற்குச் சுவற்றின் மையப் பகுதி மற்றும் இரண்டாம் மாடியின் தொகுதி 7 இன் தரைப் பிரதேசத்தின் மையம் இத்தொகுதியின் உச்சியின் மேற்கு பல்கனியின் மையப் பகுதி மற்றும் இத்தொகுதியின் தரைப் பிரதேசத்தின் மையப்பகுதி அடி மண் கொழும்பு காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் Con A 170/52 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1974, சனவரி 23 ஆந் திகதியிடப்பட்ட இல. 732 எனும் தொடர் மாடி வரைபடத்தில் காட்டப்பட்ட அடிப்படை பொது வசதிகளை உபயோகிக்கக்கூடிய உரிமையுடனானது.

அடிப்படை பொது வசதிகள் -

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். எஸ்.ரீ. பீ. சேனாதீர என்பவரால் தயாரிக்கப்பட 1974, சனவரி 23 ஆந் திகதியிடப்பட்ட இல. 732 எனும் தொடர்மாடி வரைபடத்தில் காட்டப்பட்ட படிக்கட்டு மற்றும் Z என குறிப்பிடப் பட்ட கீழே இறங்கும் இடம் பின்வருமாறு எல்லைப்படுத்தப்பட்டுள்ளது. வடக்கு : Z எனக் குறிப்பிடப்பட்ட படிக்கட்டு மற்றும் கீழே இறங்குமிடத்தின் வடக்குச் சுவற்றின் மையம் ; கிழக்கிற்கு : Z எனக் குறிப்பிடப்பட்ட படிக்கட்டு மற்றும் கீழே இறங்குமிடத்தின் கிழக்குச் சுவற்றின் மையம் ; தெற்கிற்கு : Z எனக் குறிப்பிடப்பட்ட படிக்கட்டு மற்றும் கீழே இறங்குமிடத்தின் தெற்குச் சுவற்றின் மையம் ; மேற்கிற்கு : Z எனக் குறிப்பிடப்பட்ட படிக்கட்டு மற்றும் கீழே இறங்குமிடத்தின் மேற்குச் சுவற்றின் மையம், 2 ஆம் மாடி இல. 39, 2/1 ஃபெலெட்டின் சீலினின் உச்சி மற்றும் Z எனக் குறிப்பிடப்பட்ட படிக்கட்டு மற்றும் கீழே இறங்குமிடத்தின் தரைப் பிரதேசத்தின் மையம் 440 சதுர அடிகளிலான தரைப்பிரதேசம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,
கம்பனிச் செயலாளர்.

6-236

செலான் வங்கி பீஎல்சீ – டெவலப்மன்ட் பேங்கிங் யூனிட்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

முதலாவது ஏல விற்பனை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரலே, பல்லேபத்துவ, பத்தரமுல்லையில் அமைந்துள்ள அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் ஏ. ஆர். சில்வா அவர்களால் வரையப்பட்ட 2003.10.22 ஆந் திகதிய 1571 ஆம் இலக்கமிடப்பட்ட வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட பத்தரமுல்லை வீதி, வரிமதிப்பீட்டு இல. 172 இடப்பட்ட நுககஹகும்புர அல்லது மீகஹகும்புர என்ற பெயருடைய காணித்துண்டு 1ஏ என அடையாள மிடப்பட்டு பிரித்து வேறாக்கப்பட்ட காணிப்பிரிவு அதன் இல. 1571 இடப்பட்ட வரைபடத்தின்படி மும்பத்தொன்பது தசம் மூன்று ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 39.35பே.) அளவு கட்டிடம், மரங்கள் அங்குள்ள சகலவைகளோடு உள்ள காணி. இது ஹோமாகம காணிப்பதிவு அலுவலகத்தில் பி1451/208 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது. அந்தத் துண்டு 1ஏ கீழே குறிப்பிடப்பட்ட காணியின் சேர்வையாகும்.

1. **முன்னர் கூறப்பட்ட பத்தரமுல்லையில் அமைந்துள்ள அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் ஏ. ஆர். சில்வா அவர்களால் வரையப் பட்ட 2003.06.24 ஆந் திகதிகொண்ட இல. 1487 இடப்பட்ட வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட நுககஹகும்புர அல்லது மீகஹ கும்புர என பெயருள்ள காணித்துண்டின் 1 என அடையாள மிடப்பட்டு பிரித்து வேறாக்கப்பட்ட காணிப்பிரிவு. அதன் 1487 ஆம் இலக்க மிடப்பட்ட வரைபடத்தின்படி ஒரு றூட் இரண்டு பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 2பே.) அங்குள்ள வேறு சகலவைகளோடும் உள்ள காணி**
2. **முன்னர் குறிப்பிடப்பட்ட பத்தரமுல்லையில் முன்னர் குறிப்பிட்ட 1487 ஆம் இலக்கமிடப்பட்ட வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட நுககஹகும்புர அல்லது மீகஹகும்புர பெயருடைய காணித்துண்டு 2 என அடையாளமிடப்பட்டு பிரித்து வேறாக்கப்பட்ட காணிப்பிரிவு, அதன் 1487 என இலக்கமிடப்பட்ட வரைபடத்திற்கேற்ப எட்டு தசம் மூன்று ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 8.35) அளவு மரங்கள், பயிர் மற்றும் அங்குள்ள சகலவைகளோடும் கூடிய காணி**

(இவ்வாதனம் மற்றும் இயந்திராதிகள் பத்தரமுல்லை கூட்டிணைக்கப் பட்ட உறுதிப்பத்திர இல. (என்பிவிஎல்) 34674 இடப்பட்ட 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கமிடப்பட்ட நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் இலங்கையினுள் உரியவாறு கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமான மட்டுப்படுத்தப்பட்ட சகுரா டென்டல் ஹொஸ்பிடல் (தனியார்) நிறுவனம் என்போர் உடன்பாட்டாளர் களாக செலான் வங்கி பீஎல்சீ இடம் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் வசதிகளுக்காக வங்கி பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.)

மேலே குறிப்பிடப்பட்ட ஆதனம் 2010, யூன் மாதம் 29 ஆந் திகதி முற்பகல் 10.30 மணிக்கு குறிப்பிட்ட ஆதனம் அமைந்திருக்கும் இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

காணிக்குச் செல்லும் விதம்.- கொழும்பிலிருந்து இராஜகிரிய வரை செல்லும்போது இருக்கும் ஜயவர்தனபுர மாவத்தைக்குப் போய் இன்னும் 1.5 கிலோ மீட்டர் வரை சென்று கடுவலை வீதிக்குச் சென்று இன்னும் 100 மீட்டர் வரை முன்னால் செல்லும்போது வீதியின் இடதுபக்கத்தில் அமைந்துள்ளது.

இரண்டாவது ஏல விற்பனை

இயந்திராதிகள்	மாதிரிகள்/ தொடர் இலக்கங்கள்
1. விஜுபி செயார் (கதிரை) யோடு இன்ட்ரா ஒரல் கமரா உதிரிகளோடு (சிக்னோ பி30)	13208181 35
2. டென்டல் செயர்ஸ் (கதிரை) உதிரிகள் அக்டஸ் (அக்டஸ் 9000)	ஈசி-யு
3. வேஹன்ட் இன்ஸ்டுமென்ட் டென்டல் ட்ரீட்மென்டுக்காக	
4. டென்டல் சர்ஜரி இன்ஸ்டுமென்ட்	
5. கடிங் இன்ஸ்டுமென்ட் மற்றும் எப்ரேசிவ்ஸ்	
6. அல்ட்ரா சோனிக் கிளீனர்	6021
7. டென்டல் எக்ஸ் நிறுவை அலகு	
8. பெனரோமிக் எக்ஸ் நிறுவை அலகு	
9. ஒட்டோமெடிக் பில்ம் புரொசெஸஸ்	920461
10. ஒட்டோ க்ளேவ்	சிஓ421026/27
11. டென்டல் போட் ரூட் இஸட்எக்ஸ்	டிபி2எக்ஸ்-3119
12. டென்டல் போட் இஸட் எக்ஸ்	எச்பி 4024/25
13. எண்டோவேவ் 21 மி. மீ.	
14. எண்டோவேவ் 25 மில்லிமீற்றர்	
15. பல்ப் டெஸ்டர்	49831/43/45
16. பொசிலேன் பர்னஸ்	ஈஎஸ்டிஏஜிஏ/156254
17. வெகும் பம்ப்	34125
18. ரிங் பர்னஸ்	0410016
19. ஆப்டர் பெர்னர்	எஸ்ஏபி100பிரன்ஹைட்
20. சென்ரி பியூகல்	
21. வெகூடம் மிக்சர்	7648
22. வைபிரேட்டர்	230
23. மோல்ட்ரிமர்	2502
24. லெபோட்டரி வயர் டர்பைன்	
25. லெபோட்டரி மைக்ரோ மோடர்	7609/07/08
26. ஸ்டீம் கிளீனர்	ஜேஎஸ்2500
27. எயர் கன்கிட்	
28. லெபோட்டரி கேஸ் டொட்வை	வைஜி9000
29. மப்டி பேர்பஸ் லைட் கியோரிங் யுனிட்	2376
30. ஹிட் கியோரிங் யுனிட்	4366எஸ்என்01
31. லெபோட்டரி லேக்	3733எஸ்என்ஓ
32. ஜேஎம் ஹைட்ரொலக் ப்லாஸ் பிரேஸ்	1778
33. பென்சில் பிளாஸ்டர்	எஸ்கே012
34. சுபர் எல்டர்	எஸ்ஈ3
35. லெபோர்ட்ரி வைகூம் மவுத்	
36. ஆர்டி கியுலேட்டர் ஸ்பேசிடைப் யுனிட்	வைபே370டபிள்யு-டி
37. கம்பிரேசர்	வைபே260டபிள்யு-டி

இவை பத்தரமுல்லை ஸ்ரீ சுபூதிபுர, கெழுனு மாவத்தை, இல. 16/7, மட்டுப் படுத்தப்பட்ட சகுரா டென்டல் ஹோஸ்பிட்டல் தனியார் நிறுவனத்தில் வைக்கப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்ட இயந்திராதிகள் மற்றும் பொருட்கள் 2010, யூன் மாதம் 29 ஆந் திகதி முற்பகல் 11.00 மணிக்கு அந்த இயந்திராதிகள் வைக்கப் பட்டுள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.- அரசாங்க வர்த்தமானியில் 2010.03.05 ஆந் திகதி பிரசுரமாகி உள்ளதோடு "லங்காதீப", "டெயிலி மிரர்" ஆகிய தினசரிகளில் 2010.04.02 ஆந் திகதியும், "தினக்குரல்" பத்திரிகையில் 2010.04.09 ஆந் திகதியும் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

கொடுப்பனவு செய்யும் விதம்.- இக்காணியைப் பெறுவதற்கு உரித்தானவர் ஏலமுடிவின்போது கீழ்க்குறிப்பிட்டவாறு பணத்தைச் செலுத்த வேண்டும் :-

(1) முழுக் காணி விலையில் (10%), (2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தவேண்டிய வரி பெறும் விலையில் 1% மற்றும் அதற்காக அரசு அல்லது உள்ளூர் அதிகார சபையால் விதிக்கப்படும் வேறு எவ்வகையான வரிகளும் செலுத்தப்படல் வேண்டும், (3) ஏலவிற்பனையாளரின் செலவுத் தொகை 2.5%, (4) நொத்தாரிசு கட்டணம் விற்பனை நிபந்தனைகளை உறுதிப்படுத்துவதற்காக ரூ. 2,000, (5) எழுதுவினைஞர் அத்துடன் கூவுவோர் கட்டணம் ரூ. 500, (6) விளம்பரச் செலவுகள் அத்துடன் காணியைப் பெறுவதற்கான தொகையில் 90% செலான் வங்கியின் இந்த ஏலவிற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படல் வேண்டும்.

உரித்து உறுதி மற்றும் விபரங்களுக்கு.- "உதவிப் பொது முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீஎல்சீ, இல. 90, காலி வீதி, கொழும்பு 3" உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி 011-2456285, 011-2456276, 011-2456284.

துசித கருணாரதன் (ஜே.பீ.),
அனுமதிபெற்ற ஏலவிற்பனையாளர்
மற்றும் நீதிமன்ற ஆணையாளர்.

டி. அன்ட் எச். ஏலவிற்பனையாளர்,
இல. 50/3, விகார மாவத்தை,
கொலன்னாவை.
தொலைபேசி இல. 011-3068185, 011-2572940.

6-171

கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ – கடுவெல கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

காணிகள் ஏல விற்பனை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பல்லேபத்து, ஏவகம கோரலயில் கடுவெலை பிரதேச சபை எல்லையில் மாலபே பிட்டுகல கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் அனில் நவகமுவ 2003.09.15 ஆந் திகதி அளந்து வரையப்பட்ட வரைபட இலக்கம் 1638 இல் காண்பிக்கப் பட்ட கெகுணுகாலந்த காணியின் லொட் எஸ்2 மற்றும் இக்காணியில் அமைந்துள்ள கட்டிடங்கள், நிலம், மரங்கள் மற்றும் எல்லாம் சேர்த்து.

(விஸ்தீரணம் : (0ஏ .1றூ. 1பே.)

(கடன் எடுத்த எஸ். கே. என்டபிரயிஸ் என்ற பெயரில் தனி உரிமையாளராக வியாபாரம் செய்யும் விக்ரம ஆராச்சிகே தொன் சிசிர குமார மேற்படி ஆதனத்தை கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ இற்கு ஈடுவைத்துள்ளார்.)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் பீகியு 116) இனால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி மேலே விபரிக்கப்பட்ட காணியை 2010.07.08 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் அந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பதற்கு எனக்கு பொறுப்பாயுள்ளது. இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பித்த நிதிச் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக் கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியினர் ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறுக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதொரு கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிழற் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக் கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, கணக்கீட்டுத் தத்துவங்களினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக் கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அவற்றின் ஒட்டுமொத்த வெளிப்படுத்தல்களின் மதிப்பீடு, பின்பற்றிய கணக்கீட்டுக் கொள்கைகள் பொருத்தமானதாகவும் மாற்றமின்றிப் பிரயோகிக்கப்பட்டும் போதியளவில் வெளிப்படுத்தப்பட்டும் காணப்பட்டதா என்பதனை நிர்ணயித்தல் போன்றவற்றினை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது சிறந்த அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் என்றும் எனது அபிப்பிராயத்திற்கு நியாயமான அடிப்படையை கணக்காய்வு வழங்கியதென்றும் நான் நம்புகின்றேன். 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

2. ***நிதிக்கூற்றுக்கள்***

2.1 ***அபிப்பிராயம்:***

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய பல்கலைக்கழகமானது 2007, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய தாக்கங்களைத் தவிர இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கும் பொதுவாக ஏற்றுக்கொள்ளக்கூடிய கணக்கீட்டு கொள்கைகளுக்கும் அமைய பல்கலைக்கழகத்தின் 2007, திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 ***நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்***

2.2.1 *கணக்கீட்டுக் குறைபாடுகள்:*

(அ) ரூபா 801,974,411 ஆன செலவினம் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளின் கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையில் அவதானிக்கப்பட்ட பதினாறு கணக்கீட்டுக் குறைபாடுகள் பல்கலைக்கழகத்தின் உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. ஆகவே, ஏனைய பகுதிகளிலும் மேலதிக கணக்கீட்டுக் குறைபாடுகள் இருப்பதற்கான சாத்தியம் கணக்காய்வில் ஒதுக்கப்பட முடியாததாகும்.

2.2.2 *பெறவேண்டிய செலுத்த வேண்டிய கணக்குகள்:*

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன:-

(அ) ரூபா 9,976,031 மொத்தமான வழங்குகை முற்பணங்கள் இடம் பெயர்ந்த பதவியினருக்கான சம்பள முற்பணங்கள், கட்டிட முற்பணங்கள், பதவியினர் கடன் என்பன 01 தொடக்கம் 21 வருட வீச்சுடைய காலப் பகுதிக்குத் தீர்க்கப்படாதிருந்தன.

(ஆ) முறையே ரூபா 482,526,123 மற்றும் 4,22,569,255 மொத்தமான கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் ஆகியோரிடமிருந்து உறுதிப்பத்திரங்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 11,068,658 மொத்தமான கடன்படுநர் மீதிகள் தொடர்பான காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.4 *கணக்காய்விற்கான சான்றின்மை:*

தேவையான சான்றுகளின்மையால் ரூபா 1,494,811,356 பெறுமதியான சொத்துக்கள் கட்டிட நிர்மாணத்திற்கான முற்பணங் கள், பிணைக் கடப்பாடுகள் என்பன கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதி செய்யப்பட முடியாதிருந்தன.

2.2.5 *சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள், முகாமைத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை:*

பின்வரும் சட்டங்கள், திறைச்சேரிச் சுற்றறிக்கைகளும் அரச நிதிப் பிரமாணங்களும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவை என்பவற்றிலுள்ள ஏற்பாடுகள் இணங்கியொழுகப்பட்டிருக்கவில்லை:-

(அ) 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) அதிகாரச் சட்டம்

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கங்கள் 18(6), 18(7) என்பன

(இ) நிதிப் பிரமாணங்கள் 103(1), 104, 104(2), 109, 264, 396, 447, 700(5), 702(3) 751(1) 688(2)(எவ்), 1646 என்பன.

(ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவை
அதிகாரம் V இன் பிரிவுகள் 7: 6 தொடக்கம் 7: 6 : 2 வரை மற்றும் 7: 8
அதிகாரம் XIV இன் பிரிவு 4
அதிகாரம் XX இன் பிரிவு3:1
அதிகாரம் XXIV இன் பிரிவு 3:1
அதிகாரம் XXV இன் பிரிவு 2:2 (எவ்)
அதிகாரம் XXVI இன் பிரிவு 2:4, 3:3 மற்றும் 5 என்பன
அதிகாரம் XXVII இன் பிரிவு 9:4

(உ) திறைசேரி சுற்றறிக்கைகள்:
(i) 1979, யூலை 29 இன் இல. 828 மற்றும் 2002, செத்தெம்பர் 30 இன் இல. 364(3)
(ii) 1989 யூன் 16 இன் பிஈடி/52 இன் பந்திகள் 5:4 (பி) மற்றும் 113 (ஜே) என்பன

(ஊ) 1990 ஒற்றோபர் 10 இன் 41-90 ஆம் இலக்கம் மற்றும் 1989, மார்சு 23 இன் 19/89 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கைகள்

(எ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கைகள் :
(i) 1994 ஏப்பிறல் 20 இன் இல. 30/94
(ii) 1988, மே 09 இன் 367 ஆம் இலக்கம் மற்றும் 2005, மார்சு 22 இன் 3/2005 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கைகள்

(ஏ) 2006 இன் பெறுகை வழிகாட்டிகளின் 3.5 மற்றும் 3.6 ஆம் பந்திகள்

(ஐ) 1973, திசெம்பர் 17 இன் 58 ஆம் இலக்க ஒப்பந்தச் சுற்றறிக்கை

3. ***நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு***

3.1 ***நிதிசார் மீளாய்வு*** :

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றிகளின்படி முன்னைய ஆண்டின் தொடர்பான ரூபா 569,834,728 பற்றாக்குறையுடன் ஒப்பிட்டவாறு பல்கலைக்கழகத்தின் மீளாய்வாண்டிற்கான செயற்பாடு மீண்டெழும் செலவினத்திற்கான அரச மானியத்தைக் கணக்கிலெடுக்க முன்னர் ரூபா 580,080,260 பற்றாக்குறையாக விளைந்திருந்தது. மீண்டெழும் செலவினத்திற்கான ரூபா 579,853,000 ஐக் கணக்கிலெடுத்த பின்னர் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 227,260 க்குக் குறைக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டுக்கான மீண்டெழும் செலவினத்திற்கான ரூபா 503,400,000 அரச மானியம் அவ்வருடத்திற்கான பற்றாக்குறையை ரூபா 66,434,728 க்குக் குறைத்திருந்தது.

3.2 ***குறித்த நிதிகளின் பயன்படுத்துகை:***

வழங்கப்பட்ட குறித்த நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிராததுடன் ரூபா 2,323,453 வட்டி உரிய அதிகாரமின்றி நிலையான வைப்பிற்கு மாற்றப்பட்டிருந்தது.

3.3 ***சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்:***

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன:-

(அ) பல்கலைக்கழகத்தின் வசதி மற்றும் சேவைக்கூறுகளுக்கு உள்ளகத் தொடர்பாடல் முறைமை பயன்படுத்துவதற்குப் பதிலாக எழுபத்தேழு நேரடித் தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த நேரடித் தொலைபேசி இணைப்புகளில் அனேகமானவை பல்கலைக்கழகத்தின் உள்ளகத் தொடர்பாடலுக்கு உபயோகிக்கப்பட்டிருந்தன. இதன் விளைவாக ''ரெலிகொம்'' நிறுவனத்திற்கு தொலைபேசிக் கட்டணங்களாக ரூபா 2,336,428 செலுத்தப்பட்டிருந்தது. உள்ளகத் தொடர்பாடல் முறைமை அதன் முழு இயலளவில் இயங்கிருந்தால் தொலைபேசி கட்டணங்கள் ரூபா 84,122 க்குக் குறைக்கப்பட்டிருக்க முடியும்.

(ஆ) வெளிவாரிப் பரீட்சைகள் அலகு தொடர்பாக ரூபா 76,640 புல் வெட்டும் கூலியாகக் கொடுக்கப்பட்டிருந்தது. இவ்வேலை பல்கலைக்கழகத் தொழிலாளர்களாற் செய்யப்பட்டிருக்க முடியும்.

(இ) விஞ்ஞான பீடம் தொடர்பாக ரூபா 87,750 நிலம் துப்புரவாக்குதல், மட்டுப்படுத்துதல் கூலியாகச் செலுத்தப்பட்டிருந்தது. இவ்வேலை பல்கலைக்கழகத் தொழிலார்களாற் செய்யப்பட்டிருக்க முடியும்.

(ஈ) பல்கலைக்கழகம் தனது வாகன அணியில் 6 வாகனங்களைக் கொண்டிருந்த போதிலும் வெளியாரிடமிருந்து வாகனங்களை வாடகைக்கு பெற்றதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 352,911 செலுத்தப்பட்டிருந்தது.

3.4 ***பயனற்ற செலவினம் :***

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன:-

(அ) பழைய செய்தித்தாள்களை களஞ்சியப்படுத்தவும், புத்தகங்களை ஒழுங்குபடுத்தவும் நூலகரால் பத்து பத்திரிகை அலுமாரிகளும் ஒரு கண்ணாடியிடப்பட்ட மர அலுமாரியும் கோரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வழங்கப்பட்ட பொருட்கள் விவரணத்துடன் இணங்கியிருக்கவில்லை. இதன் விளைவாக மேற்கண்ட பொருட்களுக்காகச் செலுத்தப்பட்ட ரூபா 226,500 கணக்காய்வில் பயனற்ற செலவாகக் கருதப்பட்டது.

(ஆ) வவுனியா வளாகத்தில் அத்திவாரம் வெட்டுவதற்காக ரூபா 198,983 செலவிடப்பட்டு பின்னர் இச்செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

3.5 ***மெதுவாக அசையும், பயனற்றிருக்கும், குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்:***

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன:-

(அ) பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான இரண்டு ஸ்கூட்டர்கள் ஆறு வருடங்களுக்கு மேலாகப் பயன்படுத்தப்படாதிருந்தன.

(ஆ) 4229 ''யுனிவர்சல்'' பிரசுரப் புத்தகங்கள் நுகர்வுக் களஞ்சியத்தில் நீண்ட காலமாகப் பயனற்றிருந்தன.

(இ) ரூபா 750,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட ஒரு ''மல்ரி ஸ்ரேசன்'' இயந்திரம் (பொலி ஸ்ரேசன் ஜிம்) இரண்டு வருடங்களாகப் பயன்படுத்தப்படாதிருந்தது.

(ஈ) முகாமைத்துவப் பீடத்திற்கான ஒரு கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்காக ரூபா 6,589,667 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ஒருகாணி கருதிய நோக்கத்திற்காக 3 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தப்படாதிருந்தது.

(உ) கொழும்பிலுள்ள ஒரு வங்கிக் கணக்கில் 04 வருடங்களாக ரூபா 10,576 செயற்படுத்தப்படாமல் இருந்தது.

(ஊ) களஞ்சியங்களில் ரூபா 218,981 பெறுமதியான 08 வகுதிகளைச் சேர்ந்த 6,493 பொருட்கள் ஆறு வருடங்களுக்கு மேலாக பயனற்றிருந்தன.

(எ) ரூபா 182,400 க்கு கொள்வனவு செய்யப்பட்ட நேரப் பதிவு இயந்திரம் 2001 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்படாதிருந்தது.

(ஏ) ரூபா 2,137,500 க்கு கொள்வனவு செய்யப்பட்ட 225 இரும்புக் கட்டில்கள் ஒரு வருடத்திற்கு மேலாகப் பயன்படுத்தப்படா திருந்தன.

3.6 ***இனங்காணப்பட்ட நட்டங்கள் :***

ரூபா 694,401 பெறுமதியான நிலையான சொத்துக்கள், களஞ்சியப் பொருட்கள், சிறிய ரொக்கம், முத்திரைகள் என்பன மீளாய்வாண்டின்போது பதிவழிக்கப்பட்டிருந்தன.

3.7 ***செயற்திட்டங்களிற் தாமதம்:***

(அ) 1990 போன்ற நீண்ட காலங்களுக்கு முன்னர் உடன்படிக்கை செய்யப்பட்ட பல்வேறு செயற்திட்டங்களின் கீழான நிர்மாண வேலைகள் இது வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வைத்திய பீடத்தில் கேட்போர் கூடத்தின் நிர்மாண வேலைகளுக்காக 1999 இலிருந்து 2000 வரைக்கும் ஒரு நிர்மாணக் கம்பனிக்கு ரூபா 7,611,885 வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிர்மாண வேலைகள் இதுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், அசாதாரண தாமதம் காரணமாக நிர்மாணக் கிரயம் பாரிய அளவில் அதிகரித்துள்ளதோடு இக்கட்டிடத்தின் நோக்கமும் அடையாளப்பட்டிருக்கவில்லை. இதனுடன் 2005 ஆம், 2006 ஆம் ஆண்டுகளின்போது கட்டிடங்கள் திணைக்களத்திற்கு உள்ளக அலங்கார வேலைகளுக்கு ரூபா 13,000,000 செலுத்தப்பட்டிருந்தது. இவ்வேலை இது வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) திருநெல்வேலியில் மாணவர் விடுதிக்கான ஒரு நீர்த்தாங்கியின் நிர்மாணத்திற்காக 1989 இல் கட்டிடங்கள் திணைக்களத்திற்கு ரூபா 2,000,000 முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. இவ்வேலை இது வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கொழும்பிலுள்ள ஒரு தனியார் கம்பனிக்கு பெறுமதிசேர் வரியாக ரூபா 1,323,071 உம் ''எஸ்ஜடிஎ ஜரீ'' வலைப்பின்னல் செயற்திட்டத்திற்கு ரூபா 8,820,474 உம் செலுத்தப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கை கணக்காய்விற்காக பெற்றுக் கொள்ளப்படவில்லை. இச்செயற்திட்டம் 2005, இன் முற்பகுதியில் தொடங்கியிருந்தும் இவ்வறிக்கைத் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, பூர்த்தி செய்வதிலுள்ள தாமதத்தினால் இச்செயற்திட்டத்தின் நோக்கம் அடையப்பட்டிருக்கவில்லை.

(உ) இவ்வாண்டின் போது இரண்டு மின் பிறப்பாக்கிகளின் (ஹிமொயின் சா-80 கேவிஏ) கொள்வனவுக்காக ரூபா 4,140,000 செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இம்மின் பிறப்பாக்கிகள் 2008, யூன் 19 வரை பொருத்தப்பட்டிருக்கவில்லை. ஆகவே கடந்த பதினாறு மாதங்களாக இக்கொள்வனவின் நோக்கம் அடையப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பம்பைமடுவில் வவுனியா வளாகத்திற்கு ஒரு நீர்த்தாங்கியையும் ஒரு நிலத்தடித் தாங்கியையும் நிர்மாணிப்பதற்காக வடக்கு கிழக்கு மாகாண சபையின் கட்டிடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளருக்கு 2004, திசெம்பர் 31 இலும் 2005, நவெம்பர் 16 இலும் முறையே ரூபா 3,200,000 ரூபா 3,014,000 ஆன இரண்டு முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. (மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 6,214,000 ஆகும்.)
நிலத்தடித் தாங்கியின் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நீர்த்தாங்கியும், மீதி வேலையும் 2006, யூன் 29 வரை பூர்த்தி செய்யப்பட்டிராததுடன் ஒப்பந்தமும் முடிவுறுத்தப்பட்டிருந்தது. முடிவுறுத்தல் வரை ஒப்பந்தக்காரருக்கு ரூபா 2,439,956 செலுத்தப்பட்டிருந்தது.
2006, நவெம்பர் 10 இல் ரூபா 5,615,000 க்கு ஒரு புதிய உடன்படிக்கை கையெழுத்திடப் பட்டிருந்தது. ஆனால் வேலைகள் 2007, திசெம்பர் 31 இல் கூட பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இவ்வேலையில் ஒரு நீண்ட தாமதம் அவதானிக்கப்பட்டது.

3.8 ***கல்விசார் பதவியினரின் நியமனம்:***

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன:-

(அ) பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடத்திற்கும் வெவ்வேறாக விரிவுரையாளர்களின் நிரந்தரப் பதவிகளுக்கு நியமனம் செய்தல் ஒரு பொது விதியாக இருந்ததால் ஒரே கற்கை நெறிக்கு பல விரிவுரையாளர்களை இணைத்துக் கொள்ள வேண்டியிருந்தது. பல்வேறு பீடங்களுக்கு நேர அட்டவணையைத் தயாரித்தலில் வேறு பீடங்களிலுள்ள நிரந்தர விரிவுரையாளர்களின் சேவை கிடைத்தல் பற்றிக் கருத்திலெடுக்கப்பட்டிருக்கவில்லை. நிரந்தரப் பதவியினரில் உள்ள விரிவுரையாளர்களின் சேவை மற்றொரு பீடத்திற்கு தேவைப்பட்ட போதிலெல்லாம் அவர்களுக்கு வருகைதரு விரிவுரையாளர்களாக வேறான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அத்தகைய சேவைகளுக்கு மேலதிகமாக விரிவுரைக் கட்டணங்களும் செலுத்தப்பட்டிருந்தன.

(ஆ) பல சந்தர்ப்பங்களில், தற்காலிக விரிவுரையாளர்கள், கட்டுரையாளர்கள், செய்முறைக் காட்டுனர்கள் போன்றோர் முறையான ஆட்சேர்ப்பு நடைமுறையைப் பின்பற்றாமல் பகுதித் தலைவர்களின் வேண்டுகோள்களின் பேரில் நியமிக்கப்பட்டிருந்தனர்.

(இ) தகைமையுடைய, மற்றும் பல்கலைக்கழக முறைமைக்குள் தொழில்வாய்பினை எதிர்பார்ப் போருக்கு போட்டியிடும் சந்தர்ப்பத்தைக் கொடுக்காமல் கல்விசார் பதவியினரின் வெற்றிடங் களை முறையற்ற விதத்தில் நிரப்புதல் பல்கலைகழகத்தின் வழமையான தன்மையாயிருந்தது. இது கடந்த பல வருடங்களாக எனது அறிக்கைகளிற் சுட்டிக் காட்டப்பட்டிருந்ததும் இக்குறைபாட்டை நிவர்த்தி செய்ய எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.9 ***நடத்தப்பட்ட கற்கை நெறிகளும், பரீட்சைகளும்:***

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன:-

(அ) பல்கலைக்கழகத்தின் 10 கற்கைநெறிகளுக்குப் பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 5116 ஆகும். மீளாய்வாண்டின்போது மேற்கொள்ளப்பட்ட மொத்த மீண்டெழும் செலவு ரூபா 362,800,828 ஆகும். மீளாய்வாண்டிற்கான ஒரு மாணவருக்குரிய சராசரி மீண்டெழும் செலவு ரூபா 70,915 ஆகும்.

(ஆ) பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடத்தின் கீழும் நடத்தப்பட்ட பல்வேறு கற்கை நெறிகளுக்கான பரீட்சைகளை நடாத்துவதற்கான திகதிகளும், பரீட்சை முடிவுகளை வெளியிடுவதற்கான இலக்குத் திகதிகளும் நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை. சில பீடங்களால் 2006 ஆம், 2007 ஆம் ஆண்டுகளின் போது நடத்தப்பட்ட பரீட்சைகளின் பெறுபேறுகளை வெளியிடுவதில் குறிப்பிடத்தக்க அளவு தாமதங்கள் இருந்தமையும் மேலும் அவதானிக்கப்பட்டது.பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 1995, யூலை 14 இன் 636 ஆம் இலக்க சுற்றறிக்கைப்படி பரீட்சை நடத்தப்பட்டதன் பின்னர் மூன்று மாதங்களுக்குள் பெறுபேறுகள் வெளியிடப்பட வேண்டும். ஆனால், பெறுபேறுகளின் வெளியீடு 06 தொடக்கம் 12 மாதங்கள் வரையான காலப்பகுதியால் தாமதிக்கப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டின்போது நடத்தப்பட்ட பரீட்சைகளுக்குத் தோற்றிய மாணவர்களது மொத்த எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

3.10 ***பட்டப்பின் படிப்புக்காக சம்பளத்துடனான மற்றும் சம்பளமற்ற விடுமுறை வழங்கல்:***

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன:-

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவகங்களுக்கான தாபன விதிக் கோவையின் 10 ஆம் அத்தியாயம் 27.4 ஆம் பிரிவில் கூறப்பட்ட அறிவுறுத்துரைகளைக் கருத்திற் கொள்ளாமல் வெளிநாட்டுக்குச் சென்ற விரிவுரையாளர்களுக்கு ஒரு வருடத்திற்கு மேற்பட்ட படிப்பு விடுமுறை வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) தகுதிகாண் காலத்திலுள்ள விரிவுரையாளர்களுக்கு ஒரு வருட சேவையைப் பூர்த்தி செய்யும் முன்னரே படிப்பு விடுமுறை வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

3.11 ***பாதீட்டுக் கட்டுப்பாடு:***

பாதீடு செய்யப்பட்ட மற்றும் உண்மையான வருமானத்திற்கும் செலவினத்திற்குமிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது முகாமைக் கட்டுப்பாட்டுக்குரிய ஒரு பயனுறு கருவியாக உபயோகிக்கப்பட்டிருக்கவில்லை என்பதை சுட்டிக் காட்டுகிறது.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்.

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் படியான எனது விரிவான அறிக்கை மூலம் பல்கலைக்கழகத்தின் உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) ஆளணி முகாமைத்துவம்
(ஆ) பாதீடு
(இ) களஞ்சியங்கள்
(ஈ) ஒப்பந்த நிருவாகம்
(உ) நூலக நிருவாகம்
(ஊ) நிலையான சொத்துக்கள்

எஸ். ஸ்வர்ணஜோதி,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

31.12.2007 இல் முடிவடைந்த ஆண்டுக்கான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கணக்குகள்மீது கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆளுநர் சபையின் அவதானிப்புகள்

2.2.2 அ. I. விநியோக முற்பணம்.- அறிக்கையில் காட்டப்பட்ட விநியோக முற்பணம் தவறானதாகும். சரியான தீர்க்கப்படாத விநியோக முற்பணம் ரூபா 35,636.43 ஆகும். 31.12.2007 இல் இருந்த ரூபா 35,636.43 பெறுமதியான தீர்க்கப்படாத விநியோக முற்பணத்தில் ரூபா 20,137.68 பெறுமதியானவை 2008 ஆம் ஆண்டில் தீர்க்கப்பட்டுவிட்டது. மிகுதியைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

II. காகிதாதிகளும் நானாவிதப் பொருட்களுக்குமான முற்பணம் .-31.12.2007 இல் இருந்த ரூபா 5,481,207.99 பெறுமதியான காகிதாதிகளும் நானாவிதப் பொருட்களுக்குமான முற்பணத்தில் 3,641,231.97 பெறுமதியானவை 2008 இல் தீர்க்கப்பட்டுள்ளது. மிகுதியைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

III. இடம் பெயர்ந்த பணியாளர்களுக்கான சம்பள முற்பணம் ரூபா 16,760 உம் 2009 ஆம் ஆண்டில் பதிவளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

IV. கட்டிடங்களுக்காக முற்பணம் - தீர்க்கப்படாத முற்பணங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

V. பணியாளர் கடன்கள்.-ரூபா 430,431 பெறுமதியானவற்றுக்கான விபரம் எம்மால் அடையாளம் காணமுடியவில்லை. இருந்த போதிலும் கணனிக் கடன்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் கடன்கள் என்பன நீண்டகால அடிப்படையில் முழுமையாக தீர்க்கப்படுகின்றன. தீர்க்கப்படாத இடர்கடன்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) வருமதிக் கணக்குகளில் பெரும்பாலானவை ஊழியர்களது கடன்களையும் முற்பணங்களின் மீதியையும் கொண்டுள்ளதுடன் சென்மதிக்கணக்குகள் மாணவர்களின் வைப்புத் தொகை மற்றும் ஊழியர்களின் பாதுகாப்பு வைப்புத்தொகை ஆகியவற்றைக் கொண்டுள்ளமையால் அவை அத்தாட்சிக்குட்படுத்தப்படவேண்டிய அவசியமில்லை.

(இ) கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் காட்டப்பட்ட தொகை ரூபா 110,686,580 ஆக திருத்தி வாசிக்கப்படல் வேண்டும். வயதுப் பகுப்பாய்வு 2007 ஆம் ஆண்டிற்கான அட்டவணையுடன் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இருந்த போதிலும் ரூபா 110,686,580 க்கான வயதுப்பகுப்பாய்வு கீழ்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

இ. I. உள்நாட்டு நுகரத்தக்க விநியோக முற்பணம் ரூபா 736,071.19

வயதுப்பகுப்பாய்வு	தொகை ரூபா	குறிப்புகள்
வருடங்கள் 21	450.00	ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து கழிப்பதற்காக குறிப்பிலெ டுக்கப்பட்டுள்ளது.
வருடங்கள் 05	8,250.00	பதிப்பாசிரியர் ஸ்ரீலங்கா ஜேனல் ஒவ் சவுத் ஏசியன் ஸ்ராடீஸ் நிறுவனம் முற்பணத்தை தீர்க்குமாறு கோரப்பட்டுள்ளது.
வருடங்கள் 03	26,073.85	2008 ஆம், 2009 ஆம் ஆண்டுகளில் தீர்க்கப்பட்டுள்ளது.
வருடங்கள் 02	762.58	2008 ஆம் ஆண்டில் தீர்க்கப்பட்டுள்ளது.
வருடங்கள் 01	700,534.76	2008 ஆம் ஆண்டில் தீர்க்கப்பட்டுள்ளது.
	736,071.19	

II. புத்தகங்களும் நாளேடுகளுக்குமான விநியோக முற்பணம் ரூபா 382,737.07

வயதுப்பகுப்பாய்வு	தொகை ரூபா	குறிப்புகள்
வருடங்கள் 15	161,633.00	இவை தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு நூலகர் கோரப்பட்டுள்ளார்.
வருடங்கள் 04	1,330.00	
வருடங்கள் 02	2,892.00	
வருடங்கள் 02	6,915.00	
வருடங்கள் 01	209,967.07	2008 ஆம் ஆண்டில் தீர்க்கப்பட்டுள்ளது.
	382,737.07	

III. விநியோக முற்பணம் (உள்நாட்டு) வவுனியா வளாகம் ரூபா 8,316,144

வயதுப்பகுப்பாய்வு	தொகை ரூபா	குறிப்புகள்
வருடம் 01	8,316,144	2008 ஆம் ஆண்டு முழுமையாக தீர்க்கப்பட்டுள்ளது.

IV. உபகரண விநியோக முற்பணம் - ரூபா 16,859,308

வயதுப்பகுப்பாய்வு	தொகை ரூபா	குறிப்புகள்
வருடம் 01	16,859,308	2008 ஆம் ஆண்டு முழுமையாக தீர்க்கப்பட்டுள்ளது.

V. கட்டிடங்கள் திணைக்களம் - ரூபா 52,717,207

வயதுப்பகுப்பாய்வு	தொகை ரூபா	குறிப்புகள்
வருடங்கள் 16	3,150,000	கட்டிடங்கள் திணைக்களத்தால் கைவிடப்பட்டுள்ளது. நிர்மாண வேலைகளை ஒழுங்கமைக்கும் குழு (PMC) செலுத்திய முற் பணத்தை மீளப்பெறுமாறு சிபார்சு செய்துள்ளது.
வருடங்கள் 10	340,000	2009 ஆம் ஆண்டு தீர்க்கப்பட்டுள்ளது.
வருடங்கள் 09	22,000	2009 ஆம் ஆண்டு தீர்க்கப்பட்டுள்ளது.
	71,762	கட்டிடங்கள் திணைக்களம் மீதியை மீளளிக்குமாறு கோரப்பட்டுள் ளது.
வருடங்கள் 06	1,100,113	தொடர்வேலைகளில் பயன்படுத்தப்படவுள்ளது.
	57,476	கட்டிடங்கள் திணைக்களம் மீதியை மீளளிக்குமாறு கோரப்பட்டுள் ளது.
வருடங்கள் 05	806	கட்டிடங்கள் திணைக்களம் மீதியை மீளளிக்குமாறு கோரப்பட்டுள் ளது.
	1,100,113	ரூபா 706,891, 2009 ஆம் ஆண்டு தீர்க்கப்பட்டுள்ளது. ரூபா 360,659 கட்டிடங்கள் திணைக்களத்திற்கு மீளளிக்குமாறு எழுதப்பட்டுள்ளது.
வருடங்கள் 03	638,600	கட்டிடங்கள் திணைக்களம் மீதியை மீளளிக்குமாறு கோரப்பட் டுள்ளது.
	6,000,000	கட்டிடங்கள் திணைக்களத்தால் வேலைகள் தொடங்கப்படவில்லை
வருடங்கள் 03	862,800	2009 ஆம் ஆண்டு தீர்க்கப்பட்டுள்ளது
	14,866,100	2009 ஆம் ஆண்டு தீர்க்கப்பட்டுள்ளது
	7,000,000	கட்டிடங்கள் திணைக்களத்தால் வேலைகள் தொடங்கப்படவில்லை
வருடங்கள் 01	3,766,000	2009 ஆம் ஆண்டு தீர்க்கப்பட்டுள்ளது
	13,744,000	2009 ஆம் ஆண்டு தீர்க்கப்பட்டுள்ளது
	52,717,207	

VI. இலங்கை மின்சார சபைக்கான முற்பணங்கள் - ரூபா 3,156,278

வயதுப்பகுப்பாய்வு	தொகை ரூபா	குறிப்புகள்
வருடங்கள் 08	102,921	2009 ஆம் ஆண்டு தீர்க்கப்பட்டுள்ளது
வருடங்கள் 07	123,556	2009 ஆம் ஆண்டு தீர்க்கப்பட்டுள்ளது
வருடங்கள் 06	125,550	2009 ஆம் ஆண்டு தீர்க்கப்பட்டுள்ளது
வருடங்கள் 03	197,200	2009 ஆம் ஆண்டு தீர்க்கப்பட்டுள்ளது
வருடங்கள் 02	2,607,050	இலங்கை மின்சார சபையால் வேலைகள் தொடங்கப்படவில்லை. நிர்மாண வேலைகளை ஒழுங்கமைக்கும் குழு (PMC) செலுத் திய முற்பணத்தை மீளப்பெறுமாறு சிபார்சு செய்துள்ளது
	3,156,278	

VII. கட்டிடத் திணைக்களத்திற்கு புனருத்தாரண முற்பணம் வவுனியா வளாகம் - ரூபா 850,000

வயதுப்பகுப்பாய்வு	தொகை ரூபா	குறிப்புகள்
வருடங்கள் 06	850,000	2009 ஆம் ஆண்டு தீர்க்கப்பட்டுள்ளது

VIII. திறந்த பல்கலைக்கழகம் - ரூபா 4,909

வயதுப்பகுப்பாய்வு	தொகை ரூபா	குறிப்புகள்
வருடங்கள் 18	4,909	திறந்த பல்கலைக்கழகத்திற்கு ஞாபகமூட்டல் கடிதங்கள் அனுப்பப் பட்ட போதும் உரிய மதிப்பளிக்கப்படவில்லை. கணக் காய்வும் முகாமைத்தவமும் குழு பதிலளிக்குமாறு சிபார்சு செய்துள்ளது.

IX. வீதி அபிவிருத்திக்கான முற்பணம் - ரூபா 842,824

வயதுப்பகுப்பாய்வு	தொகை ரூபா	குறிப்புகள்
வருடங்கள் 20	170,000	நிர்மாண வேலைகளை ஒழுங்கமைக்கும் குழு, நிதிக்குழு, பேரவை ஆகியவற்றின் அங்கீகாரத்துடன் இந்த முற்பணங்களைத் தீர்ப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுக்குமாறு வேலைகள் பொறியியலாளர் கோரப்படுகின்றார்.
வருடங்கள் 18	62,600	
வருடங்கள் 17	1,307	
வருடங்கள் 16	138,700	
வருடங்கள் 15	6,600	
வருடங்கள் 03	463,617	
	842,824.00	

X. கட்டிடங்கள் புனருத்தாரண முற்பணங்கள் - ரூபா 26,772,375

வயதுப்பகுப்பாய்வு	தொகை ரூபா	குறிப்புகள்
வருடங்கள் 16	515,000	2008 ஆம் ஆண்டு நிர்வாகக் கட்டிடத் தெகுதி வேலைகளுக்கு நிதி மாற்றப்பட்டப்பட்டுள்ளது.
வருடங்கள் 09	1,619	கட்டிடங்கள் திணைக்களம் மீதியை மீளளிக்குமாறு கோரப்பட்டுள் ளது.
வருடங்கள் 07	108,000	கட்டிடங்கள் திணைக்களம் மீதியை மீளளிக்குமாறு கோரப்பட்டுள் ளது.
	504,000	2009 ஆம் ஆண்டு தீர்க்கப்பட்டுள்ளது
வருடங்கள் 05	2,020,000	2009 ஆம் ஆண்டு தீர்க்கப்பட்டுள்ளது
வருடங்கள் 04	70,464	2009 ஆம் ஆண்டு தீர்க்கப்பட்டுள்ளது
	163,653	மாகாண சபையால் வேலைகள் தொடங்கப்படவில்லை. நிர்மாண வேலைகளை ஒழுங்கமைக்கும் குழு செலுத்திய முற்பணத்தை மீளப்பெறுமாறு சிபார்சு செய்துள்ளது.
	615,442	2009 ஆம் ஆண்டு தீர்க்கப்பட்டுள்ளது
	158,000	2009 ஆம் ஆண்டு தீர்க்கப்பட்டுள்ளது
	509,513	2009 ஆம் ஆண்டு தீர்க்கப்பட்டுள்ளது
வருடங்கள் 03	3,029,258	2009 ஆம் ஆண்டு தீர்க்கப்பட்டுள்ளது
வருடங்கள் 02	14,113,726	2009 ஆம் ஆண்டு தீர்க்கப்பட்டுள்ளது
வருடங்கள் 01	4,963,700	2009 ஆம் ஆண்டு தீர்க்கப்பட்டுள்ளது
	26,772,375	

XI. நிரந்தர பகுதியாக்கல் நிர்மாண முற்பணம் - ரூபா 48,727

வயதுப்பகுப்பாய்வு	தொகை ரூபா	குறிப்புகள்
வருடங்கள் 16	48,727	2009 ஆம் ஆண்டு தீர்க்கப்பட்டுள்ளது

2.2.4 ரூபா 1,494,811,356.00 இன் விபரங்கள் கணக்காய்வாளரால் சமர்ப்பிக்கப்படாமையால் அதுபற்றி எவ்வித அபிப்பிராயமும் தெரிவிக்கப்பட முடியவில்லை.

2.2.5 பல்கலைக்கழகங்கள் சட்டம், தாபனக் கோவை மற்றும் சுற்றறிக்கை ஆகியவற்றில் குறிக்கப்பட்டுள்ள விபரங்களை பல்கலைக்கழகம் முடிந்தவரை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

3.3 (அ) சுவீஸ் சர்வதேச அபிவிருத்தி முகவரால் நிதியளிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் வலைப்பின்னல் முறைமை மீளத் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வேலை முடிவுற்றதும் மேலதிக கட்டணங்கள் குறைவடையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஆ), (இ) கடந்த 25 வருட காலத்தில் எமது அங்கீகரிக்கப்பட்ட ஆளணி இரண்டு பணியாளர்களினால் மட்டுமே அதிகரிக் கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் காணி, கட்டிடங்கள் பராமரிக்கப்பட வேண்டிய அளவு வேகமாக அதிகரித்துள்ளது (நான்கு

மடங்கிற்கு மேலாக) பராமரிப்பு பகுதியில் கிட்டத்தட்ட முன்றில் ஒரு பகுதி அங்கீகரிக்கப்பட்ட ஆளணி நிரப்பப்படாமல் உள்ளது. எமக்கு பணியாளர்களை வெளியிலிருந்து கொண்டுவருவதை தவிர வேறு வழியில்லை. பராமரிப்புப் பகுதி பணியாளர்கள் வேறு முக்கிய அவசர வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டமையால் வெளியிலிருந்து பணியாளர்கள் கொண்டுவரப்பட்டார்கள்.

(ஈ) பல்கலைக்கழகத்தில் காணப்படும் வாகனங்கள் மொத்தமாக போதாதிருப்பதால் பல்கலைக்கழகம் வாடகை வாகனங்களை பயன்படுத்துகிறது.

3.4 (அ) பத்திரிகைகள் வாசிக்கும் மேசை :

2008 ஆம் ஆண்டு சகல மேசைகளும் விநியோகிக்கப்பட்டுள்ளன. களஞ்சியத்தில் இருப்புக்கள் எவையுமில்லை.

முன்பக்கக்கண்ணாடியுள்ள அலுமாரி

2008 ஆம் ஆண்டு முன்பக்கக்கண்ணாடியுள்ள அலுமாரிகள் பல்வேறு திணைக்களங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

(ஆ) பல்கலைக்கழக பொதுசபையின் அங்கீகாரத்துடன் மாகாண கட்டிடங்கள் திணைக்களத்தால் வவுனியா பூங்கா வீதியில் உள்ள மூன்று மாடிக் கட்டிடங்களுக்கிடையில் இடது வலது பக்க தொடர்பை ஏற்படுத்தும் கட்டிட நிர்மாணம் ரூபா 4,984,000.00 மதிப்பீட்டில் ஆரம்பிக்கப்பட்டது. தகவல் தொழில்நுட்ப ஆய்வு கூடம் பம்மைமடுவில் ஆரம்பிக்கப்படாமல் பூங்கா வீதிவில் மாடிகளுக்கிடையிலான தொடர்பு கட்டிட நிர்மாணம் தொடர்பான வவுனியா வளாக மாணவர்களின் கருத்தினை கருத்தில் எடுத்து பாராளுமன்றத்தில் 8 ஆனி 2005 ஆம் ஆண்டு பிரதி உயர் கல்வி அமைச்சர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர், பல்கலைக்கழக மானியங்கள், ஆணைக்குழு உத்தியோகத்தர், வவுனியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், வவுனியா வளாக முதல்வர், மற்றும் வவுனியா வளாக ஆசிரிய மாணவ பிரதிநிதிகள் ஆகியோரால் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:-

1. தகவல் தொழில்நுட்ப ஆய்வு கூடத்தை பம்மைமடுவில் நிறுவுவது.
2. பூங்கா வீதியில் கட்டிடங்கள் நிர்மாணிப்பதில்லை.
3. இழப்பீடு மேற்கொண்ட பின் பயன்படுத்தப்படாத பணம் மீதமிருந்தால்அதை வவுனியா வளாக புனருத்தாரண வேலைகளுக்கு பயன்படுத்துவது.

கட்டிட நிர்மாண வேலைகள் இடைநிறுத்தப்படும் வரை ஏற்படும் செலவுகளுக்காக ரூபா 198,983.72 கட்டிடங்கள் திணைக்களத்திற்கு செலுத்தி நிர்மாண வேலைகளை நிறுத்துவது என சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

3.5 (அ) இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஓய்வு பெற்ற கொள்வனவு உத்தியோகத்தருக்குப் பதிலாக இதுவரை கொள்வனவு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படவில்லை. தற்போது கொள்வனவு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் கொழும்பு ஆகிய இடங்களில் உள்ள ஸ்கூட்டர்கள் எதிர்காலத்தில் பயன்படுத்தப்படும்.

(ஆ) பெரும்பாலான புத்தகங்கள் ஆராய்ச்சி வெளியீடுகளாக காணப்படுவதால் அவற்றிற்கு பொதுமக்களிடமிருந்து பெரியளவில் கேள்வி இல்லை.

(இ) 2006 ஆடியில் கொள்வனவு செய்யப்பட்ட மல்ட்டி ஸ்ரேசன் மெஷின் குறுகிய காலம் பாவிக்கப்பட்டது. 2006, ஆவணியின் பின்பு ஏற்பட்ட குழப்பகரமான சூழ்நிலையால் மாணவர்கள் இந்த மெஷினை பாவிக்க முடியவில்லை. இருந்தபோதும் விரிவுரையாளர்கள் இவ்வியந்திரத்தினை பயன்படுத்துகின்றார்கள்.

(ஈ) 2009 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வேலைகள் விரைவில் தொடங்கப்படவுள்ளது.

(உ) உப வேந்தர் நல நிதியத்திற்கு வெளிநாட்டிலுள்ளவர்கள் பணம் அனுப்புவதற்காகவே இக்கணக்கு பேணப்படுகின்றது. சட்டப்படி இக்கணக்கிலுள்ள மீதி நடைமுறைக் கணக்கில் வைத்திருக்கப்பட வேண்டும் என்பதால் இது இலங்கை வங்கி கொழும்பு கிளையின் நடைமுறைக் கணக்கு 6197 இல் காணப்படுகின்றது.

(ஊ) அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பொருட்களை பாவனைக்குட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(எ) பணியாளர்களின் எதிர்ப்பு காரணமாக பல்கலைக்கழகத்தின் நேரப் பதிவு இயந்திரம் மூலமான வரவு பதியும் முறை அறிமுகப்படுத்தப்படவில்லை.

(ஏ) குடாநாட்டில் காணப்பட்ட சூழ்நிலை காரணமாக விடுதிகளுக்கும் மற்றும் வாடகை வீடுகளிற்கும் எதிர்பார்க்கப்பட்ட மாணவர்கள் சமூகமளிக்கவில்லை. மருத்துவ மாணவர்களின் விடுதிக்கான வேலைகள் நிறைவு பெற்றதும் கட்டில்கள் அங்கு விநியோகிக்கப்படும்.

3.7 (அ) கட்டிட திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்ட விடுதிக்கான தண்ணீர் தொட்டியைத் தவிர வேறு குறிப்பிட்ட வேலை எதுவும் எமது பதிவுகளின் படி முடிவுறா நிலையில் இல்லை.

(ஆ) கேட்போர் கூடத்திற்கான மிகுதி வேலைகளுக்கு கட்டிட திணைக்களம் உறுதியளிக்கப்பட்டது. அத்துடன் ரூபா 13,000,000.00 ஏற்கனவே விடுவிக்கப்பட்டது கட்டிடங்கள் திணைக்களம் வேலையை விரைவில் முடிவுறுத்துமாறு கோரப்பட்டுள்ளது.

(இ) கட்டிடங்கள் திணைக்களம் வேலையை மீளத்தொடங்குவதற்கு மீள் மதிப்பீடு சமர்ப்பித்து ஆரம்ப நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளது. நிதியினை விடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

(ஈ) சீடா தகவல் தொழில்நுட்ப வலைப்பின்னல் திட்டத்தின் கீழ் கொழும்பு பல்கலைக்கழக கணனிக்கல்லூரியில் தகவல் தொழில்நுட்ப வலைப்பின்னல் திட்டம் பொறுப்பேற்கப்பட்டது. குறிப்புகளிற்கும் நிபந்தனைகளுக்கும் அமைய பெறுமதி சேர்வரியை யாழ்ப்பாண பல்கலைக்கழகம் பொறுப்பேற்க வேண்டும். அதன்படி கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கல்லூரியில் ஒப்பந்தம் செய்யப்பட்ட ஒப்பந்தக்காரராகிய என்ரபிறைசேஸ் ரெக்னோலொஜி (பிறைவேட்) லிமிட்டெட்டுக்கு ரூபா 1,323,071.10 பெறுமதிசேர்வரிக்காக பல்கலைக்கழகத்தால் செலுத்தப்பட்டது. இங்கே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் ரூபா 8,820,474.00 கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கல்லூரிக்கு செலுத்தப்படவில்லை. இந்த தொகை கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கல்லூரியால் ஒப்பந்தக்காரருக்கு கொடுக்கப்பட்டதாகும். கணக்காய்வாளர்கள் திட்ட அறிக்கையினை கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கல்லூரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

(உ) இலங்கை மின்சார சபையிடம் பொருத்துதலும் பரிசோதனையும் கையளிக்கப்பட்டது. அவர்கள் இதில் ஈடுபட்டுள்ளார்கள். எவ்வளவு விரைவாக முடியுமோ அந்தளவுக்கு வேலையை முடித்து தருமாறு இலங்கை மின்சார சபை கோரப்பட்டுள்ளது.

(ஊ) 2004 ஆம் ஆண்டு பல்கலைக்கழக சபையால் இவ்வேலை மாகாண கட்டிடங்கள் திணைக்களத்திற்கு அளிக்கப்பட்டது. இதுவரை இவ்வேலை செய்து முடிக்கப்படவில்லை. காலதாமதம் பெரும்பாலும் 2006 ஆம் ஆண்டு கட்டிடங்கள் திணைக்களமும் ஒப்பந்தக்காரரும் வேலையை முறித்துக் கொண்டதாலும் மற்றும் வவுனியா பம்பைமடுப்பகுதியில் காணப்பட்ட களச்சூழல் என்பவற்றால் ஏற்பட்டிருக்கலாம்.

3.8 (அ) பல்கலைக்கழகத்தின் நிரந்தரமான ஆசியர்கள் தமது சம்பளத்தைத் தவிர வேறு எவ்வித கொடுப்பனவுமின்றி தமது பீடங்களினதும் ஏனைய பீடங்களிலும் கற்கை செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆசியர் ஒருவரின் கற்கைப் பணியானது அவரது கற்கைத் துறையில்அல்லது பீடத்தில் அங்கீகரிக்கப்பட்ட நியமத்திலும் பார்க்க கூடுதலாக காணப்படுமிடத்து அவர் ஏனைய கற்கைத் துறையொன்றில் அல்லது பீடமொன்றில் கற்பிக்கப்பட வேண்டிய நிலை ஏற்படுமிடத்து மட்டுமே வருகை விரிவுரையாளர் அடிப்படையில் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. தவிர்க்க முடியாத சந்தர்ப்பத்தில் மட்டுமே சிறு எண்ணிக்கையை உடைய வருகை நியமனங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஒவ்வொரு பீடத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு ஆளணியினரின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுகின்றது. கற்கைத்துறையில் தலைப்பு ஒரு மாதிரியாகக் காணப்பட்டபோதும் அதன் பரப்பளவு கற்கைநெறியின் உள்ளடக்கம் ஆகியவை மாற்றமடையலாம். உதாரணமாக விஞ்ஞான பீடத்தில் கற்பிக்கப்படும் பௌதீகம் இரசாயனம், கணிதம் ஆகியவை பொறியியல் பீடத்தில் கற்பிக்கப்படுகின்ற முறையிலிருந்து வேறுபடுகின்றன.

(ஆ) உதவி விரிவுரையாளர்களுக்கும் போதனாசிரியர்களுக்கும் செய்முறைப் பயிற்சியாளர்களுக்கான தற்காலிக நியமனங்கள் கற்கை ஆண்டு தொடங்குவதற்கு முன்னதாக விளம்பரப்படுத்தப்பட்டு அவை உரிய ஆட்சேர்ப்பு நியமனத்திற்கு அமைவாக மேற்கொள்ளப்படுகின்றன. எனினும் அவ்வாறு நியமிக்கப்பட்டவர் சேவையிலிருந்து விலகுமிடத்து அதனால் ஏற்படும் வெற்றிடத்தை நிரப்ப விளம்பரம் மேற்கொள்வதற்கு போதிய அவகாசம் காணப்படாதவிடத்து பீடாதிபதியினதும் துறைத் தலைவரினதும் வேண்டுகோளுக்கமைவாக கற்கை செயற்பாடுகளை தொடர்வதற்கு சில சந்தர்ப்பங்களில் மட்டும் அவ்வாறான நியமனங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்தகைய நியமனங்கள் இராஜினாமாச் செய்தவரின் மிகுதிக் காலப்பகுதிக்கு மட்டுமே வழங்கப்படுகின்றது.

(இ) சிரேஷ்ட கல்விமான்கள் சேவையை ஒப்பந்த அடிப்படையில் அல்லது ஒப்படைக்கப்பட்ட பணி நிறைவேற்றுதல் என்ற அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படும் சந்தர்ப்பங்கள் தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் தகுதியானவர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்காமல் எவ்வித நியமனங்களும் மேற்கொள்ளப்படவில்லை. எல்லா வெற்றிடங்களும் ஒழுங்காக விளம்பரப்படுத்தப்பட்டு ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு அமைவாக தகுதியான விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு சட்டப்படி அமைக்கப்பட்ட தெரிவுச் சபையால் அவை மதிப்பீடு செய்யப்படுகின்றன. தெரிவுச் சபையின் சிபார்சுக்கு அமைவாக நியமனங்கள் செய்யப்படுவதால் தகுதிகாண் விண்ணப்பதாரர்களுக்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்படுகின்றன.

3.9 (ஆ) சில பீடங்களில் பரீட்சைகள் கல்வியாண்டு முடிய நடாத்தப்படுகின்றன. இன்னும் சிலவற்றில் ஒவ்வொரு அரையாண்டு முடிவிலும் நடாத்தப்படுகின்றன. எனினும் முதல் அரையாண்டு காலமுடிவில் நடாத்தப்பட்ட பரீட்சையின் பெறுவேறுகள் இரண்டாம் அரையாண்டு பரீட்சை முடிவுடன் சேர்த்து வெளியிடப்படுகின்றன. இதுவே பரீட்சை ஒழுங்கு விதிகளாகும். இம்முறை பின்பற்றப்படுவதற்கான காரணம் ஒவ்வொரு அரையாண்டு முடிவிலும் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்படுமாயின் மாணவர்கள் ஐந்து கற்கை அலகுகளில் இரண்டு கற்கை அலகுகளை இரண்டாவது அரையாண்டில் தவறவிடக்கூடும். எனினும் தற்பொழுது பட்டப்படிப்பின் அமைப்பு முறை மாற்றப்படுவதால் புதிய பிரிவு மாணவர்களில் இருந்து பரீட்சை நடைபெற்ற மூன்று மாதங்களுக்குள் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்படும்.

(இ) 2007 ஆம் ஆண்டு பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் விபரம் வருமாறு :-

பீடங்கள்	மாணவர்களின் எண்ணிக்கை
மருத்துவம்	467
விஞ்ஞானம்	400
கலை	1422
இராமநாதன் நுண்கலை	731
விவசாயம்	365
முகாமைத்துவமும் வர்த்தகமும்	1100

3.10 (அ), (ஆ) கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் பந்தி 3.10 அ மற்றும் ஆ வில் குறிப்பிட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் உயர்கல்வி நிறுவனங்களினதும் தாபனக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள இப்பிரிவானது 02.03.1990 ஆந் திகதியைக் கொண்ட 429 ஆம் இலக்க பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சுற்றறிக்கை மூலம் ஆசிரியர்களுக்கான கற்கை லீவின் காலத்தை தீர்மானம் செய்யும் அதிகாரம் அந்தப் பல்கலைக்கழகப் பேரவைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

3.11 பாதீட்டுக் கட்டுப்பாடு தொடர்பாக பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன:-

1. பாதீடானது நிதிக்குழுவினாலும் பேரவையினாலும் வருடந்தோறும் அங்கீகரிக்கப்படுகின்றது.
2. ஒவ்வொரு செலவீனங்களுக்கும் ஒதுக்கப்பட்ட தொகைக்கும் செலவுகள் செய்யப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளும் நோக்குடன் வாக்குப் பண ஏடு கணனிமயப்படுத்தப்பட்டுள்ளது.
3. மாதந்தோறும் பாதீட்டுக்கும் உண்மையான செலவீட்டிற்குமென கணக்கறிக்கை நிதிக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.
4. பல்கலைக்கழத்தின் நிதிப்பிரிவினால் வவுனியா வளாகத்திற்கு வழங்கப்படும் உப கட்டு நிதியை கண்காணிப்பதன் நோக்குடன் தனியாக வாக்குப்பண பேரேடு பராமரிக்கப்படுகின்றது.

* (நிதியாளரால் தொகுக்கப்பட்டது).

6-145

அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

மேலதிக விபரங்களுக்கு.- 2010.06.11 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

வரையறுக்கப்பட்ட இலங்கை ஜக்கிய செய்திப் பத்திரிகை கம்பனியினால் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.
www.documents.gov.lk